தங்கமுருகன் ஜுவல்லர்ஸ் A/c
267, மெயின்ரோடு, நகைக்கடை பஜார், சங்கரன்கோவில்
97893 91528 - 96299 64324

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
DIGITAL MARKETING
WEB DEVELOPMENT
SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி,சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 305 | 28.04.2026 | TUESDAY | CHITHIRAI: 15 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 305 | 28.04.2026 | செவ்வாய்கிழமை | சித்திரை : 15 | விலை : ரூ.5/- |

## இந்தியா நியூஸிலாந்து இடையே தடையற்ற

# 'வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து'



புது டெல்லி: ஏப்.28-

இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில், இந்தியாவும் நியூஸிலாந்தும் இன்று தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்தியா நியூஸிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியாவின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் நியூஸிலாந்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சர் டாட் மெக்ளே ஆகியோர் இன்று கையெழுத்திட்டனர்.

இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், அனைத்து வரி விதிப்பு முறைகள் மற்றும் உற்பத்திப் பிரிவுகளையும் உள்ளடக்கி, நியூஸிலாந்துக்கான இந்தியாவின் 100 சதவீத ஏற்றுமதிக்கு வரிவிலக்கு அளிக்கிறது.

மேலும், இந்த ஒப்பந்தம் மூலம் ஜவுளி, தோல், காலணிகள், ரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள், பொறியியல் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்ற அதிக தொழிலாளர் தேவைப்படும் துறைகளில் ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களையும் வேலைவாய்ப்பையும் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, நியூஸிலாந்து பீங்கான் பொருட்கள், தரைவிரிப்புகள், வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் உள்ளிட்ட முக்கிய இந்திய ஏற்றுமதிகள் மீது 10 சதவீதம் வரையிலான உச்சபட்ச வரியைத் தொடர்ந்து விதித்திருந்தது. இனி நியூஸிலாந்திற்கான ஏற்றுமதிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுவதால், இந்தியப் பொருட்கள் அந்நாட்டில் அதிகளவில் வர்த்தகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், நியூஸிலாந்தின் 30 சதவீத வரிப் பிரிவுகளின் கீழ் வரும் மரம், கம்பளி, ஆட்டு இறைச்சி மற்றும் பதப்படுத்தப்படாத தோல் போன்ற பொருட்களுக்கு இந்தியா வரி விலக்கு அளிக்கும்.

இதேபோல், பெட்ரோலிய எண்ணெய், மால்ட் சாறு, தாவர எண்ணெய்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மின் மற்றும் இயந்திர சாதனங்கள், மற்றும் பெப்டோன்கள் உள்ளிட்ட 35.60 சதவீத வரிப் பிரிவுகளுக்கு, 3, 5, 7 மற்றும் 10 ஆண்டுகள் எனப் படிப்படியாக வரி விலக்கு அளிக்கப்படும்.

வரிச் சலுகைகளைப் பெறும் நியூஸிலாந்து தயாரிப்புகளில் ஒயின், மருந்துப் பொருட்கள், பாலிமர்கள், அலுமினியம், இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் ஆகியவை அடங்கும்

இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம், இந்தியாவுக்குள் 20 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான முதலீட்டை ஈர்ப்பதற்கான ஒரு உறுதிமொழியும் இடம்பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டில், பொருட்கள் மற்றும் சேவைகள் சார்ந்த இருதரப்பு வர்த்தகத்தின் மொத்த மதிப்பு 2.4 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியது குறிப்பிடத்தக்கது.



## கொடைக்கானலில் முதல்வர் ஸ்டாலினுடன் 'செல்ஃபி' எடுத்து மகிழ்ந்த பொதுமக்கள்

திண்டுக்கல்: ஏப்.28-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் 2வது நாளாக நடைப்பயிற்சி மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலினை பார்த்ததும் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

தமிழக சட்டப் பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ள நிலையில் கொடைக்கானலில் 5 நாட்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காக குடும்பத்துடன் முதல்வர் ஸ்டாலின் வந்துள்ளார். நேற்று காலை கொடைக்கானலின் இயற்கை அழகை ரசித்தபடி, நட்சத்திர ஏரி பகுதியில் குடும்பத்தினருடன் முதல்வர் ஸ்டாலின் நடைப்பயிற்சி மேற்கொண்டார்.

அப்போது, பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அவருடன் கைக்குலுக்கி, செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர். ஒரு மணி நேரம் நடைப்பயிற்சிக்கு பிறகு தங்கும் விடுதிக்குச் சென்ற அவர், நேற்று முழுவதும் அறையிலேயே தங்கி ஓய்வெடுத்தார். இதற்கிடையே, அவரது மனைவி துர்கா ஸ்டாலின், கொடைக்கானல் குறிஞ்சியாண்டவர் கோயிலில் குடும்பத்துடன் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

பொதுமக்கள் ஆரவாரம்: இந்நிலையில் இன்று (ஏப்.27) திங்கட்கிழமை காலை கொடைக்கானல் நகராட்சி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும், வனப்பகுதியை ஒட்டிள்ள மனோரஞ்சிதம் அணை பகுதியில் மூலிகை காற்றை சுவாசித்தபடி, ஒரு மணி நேரம் நடைப்பயிற்சி மேற்கொண்டார்.

இதை அறிந்த, பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அவரை பார்ப்பதற்காக அணையின் வெளிப்பகுதியில் காத்திருந்தனர். நடைபயிற்சி முடிந்து வெளியே வந்த முதல்வரின் காரை பார்த்ததும் துள்ளிக்குதித்து ஆரவாரத்தில் சத்தம் போட்டனர்.

சில நிமிடங்கள் காரை நிறுத்தி, காரில் இருந்தபடி பொதுமக்களுடன் கலந்துரையாடினார். அப்போது, போட்டி போட்டுக்கொண்டு பொதுமக்கள் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர். பின்னர், தங்கும் விடுதிக்கு சென்ற முதல்வர் இன்று மாலை சுற்றுலா இடங்களை சுற்றி பார்க்கவும், குடும்பத்தினருடன் நட்சத்திர ஏரியில் படகு சவாரி செய்யவும் திட்டமிட்டுள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## மனைவிக்கு கடன் விஜய் வேட்புமனுவை ஆய்வு செய்யக் கோரிய வழக்கு: ஐகோர்ட் தள்ளுபடி



சென்னை: ஏப்.28-

தனது வேட்புமனுவில் மனைவிக்கு ரூ.12 கோடியே 60 லட்சம் ரூபாய் கடன் கொடுத்ததாக தவெக தலைவர் விஜய் குறிப்பிட்டுள்ளது குறித்து ஆய்வு செய்யக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் போட்டியிட்ட தவெக தலைவர் விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் 100 கோடி ரூபாய் வித்தியாசம் உள்ளது குறித்து வருமான வரித்துறை விசாரிக்கக் கோரி பெரம்பூர் தொகுதி வாக்காளர் தாக்கல் செய்த வழக்கு, ஜூன் மாதத்துக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வேட்புமனுவில் பெருந்தொகையை மனைவி உள்ளிட்டோருக்கு கடனாக வழங்கியுள்ளதாக, விஜய் தனது வேட்புமனுவில் கூறியுள்ளது குறித்து ஆய்வு செய்யக் கோரி, மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெரம்பூர் தொகுதி வாக்காளர் வெங்கடேஷ் தாக்கல் செய்த மனுவில், விவாகரத்து கோரி தவெக தலைவர் விஜய்யின் மனைவி சங்கீதா வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், வேட்புமனுவில் அவருக்கு 12 கோடியே 60 லட்சம் ரூபாய் கடன் கொடுத்துள்ளதாக கூறியுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வேட்புமனுவில் சொத்து விவரங்களை தெரிவிப்பது வெறும் சடங்கு அல்ல. அதில் உண்மை விவரங்களை மறைப்பது தேர்தல் நடைமுறையை மோசடி செய்வதை போன்றது எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. தனியார் கல்வி அறக்கட்டளைக்கு 20 கோடி ரூபாய் பணம் வழங்கியுள்ளது குறித்து வேட்புமனுவில் முறையாக எந்த விளக்கமும் அளிக்கவில்லை எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு, ஏற்கனவே இதே கோரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க முடியாது எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

## "தவெகவின் அமைச்சரவை பட்டியல்... இல்லாத உருட்டு!" கொடைக்கானலில் சேகர்பாபு கிண்டல்



திண்டுக்கல்: ஏப்.28-

"தவெகவின் அமைச்சரவை பட்டியல் என்பது இல்லாத உருட்டு. போகாத ஊருக்கு வழி காண்பிக்கும்" என அமைச்சர் சேகர்பாபு கிண்டல் செய்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வந்துள்ள அமைச்சர் பி.கே.சேகர்பாபு திங்கட்கிழமை நேற்று தனது குடும்பத்துடன் குறிஞ்சியாண்டவர் கோயில், பூம்பாறை குழந்தை வேலப்பர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் தமிழகத்தில் மலரும். அதற்கு, மக்களின் முகத்திலேயே தெரியும் மகிழ்ச்சிதான் சாட்சி.

சென்னை எப்போதுமே திமுகவின் கோட்டை தான். 2021 மற்றும் 2024 தேர்தலில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் திமுகவுக்கு கிடைத்தது. கடந்த தேர்தலில் சென்னையில் பதிவான வாக்குகளே 2026 தேர்தலிலும் பதிவாகியுள்ளன.

அரண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய் என்ற பழமொழிக்கு எங்களால்தான் வாக்குப் பதிவு அதிகரித்துள்ளது என்று சொல்லும் தவெகவுக்குப் பொருந்தும்.

2021 தேர்தலுக்கு பிறகு 2024 மக்களவைத் தேர்தலுக்காக முதல்வர் ஸ்டாலின் ஆற்றிய களப்பணி வியப்புக்குரியது. அது தேர்தலிலும் எதிரொலித்தது. அதன் பிறகு ஒன்றரை ஆண்டுகளாக 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்காக முதல்வர் ஆற்றிய பணிகள் அளப்பரியது. தேர்தல் திசைக்காட்டியாக அவர் அளித்த பயிற்சியில் தேர்தல் களத்தில் ராணுவ வீரராக நின்றவர்கள் தற்போது களைப்பாற சுற்றுலா வந்துள்ளனர்.

தவெகவின் அமைச்சரவை பட்டியல் என்பது இல்லாத உருட்டு. போகாத ஊருக்கு வழி காண்பிக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

## புதுச்சேரியில் மும்மொழி கொள்கை: திமுக, அதிமுக எதிர்ப்பு

புதுச்சேரி: ஏப்.28-

புதுச்சேரியில் மும்மொழிக் கொள்கையில் இந்தி திணிப்பால் போராட்டம் நடத்தப்போவதாக திமுக அறிவித்துள்ளது. அதேபோல் அதிமுகவும் இரு மொழி கொள்கைக்கே ஆதரவு தெரிவித்துள்ளது.

சிபிஎஸ்இ பள்ளிகளில் 2026 27 கல்வியாண்டு முதல், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு 3வது மொழியைக் கட்டாயமாக்கும் புதிய அறிவிப்பை சிபிஎஸ்இ வெளியிட்டுள்ளது. தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக, 'தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பு 2023' ன் பரிந்துரைகளை அமல்படுத்த உள்ளனர். இந்த அறிவிப்பைச் செயல்படுத்த பள்ளிகளுக்கு ஒரு வார கால அவகாசம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இதற்கு திமுக, அதிமுக எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக புதுச்சேரி திமுக மாநில அமைப்பாளர் சிவா கூறியதாவது: மாணவர்களிடையே பன்மொழித் திறனை வளர்க்கிறோம் என்ற பெயரில் மும்மொழிப் பாடத்திட்டத்தின் திணிப்பினால், ஒரு வெளிநாட்டு மொழி, இரு பிராந்திய மொழிகள் படிக்கலாம் என்று சொல்லி, ஆங்கிலத்தை மட்டும் வைத்துக்கொண்டு, பிரெஞ்சு பாடம் நீக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் கல்விச் சுமையை அதிகரிப்பதோடு, அவர்களின் இயல்பான கற்றல் முறையையும் பாதிக்கும் செயலாக அமைந்துள்ளது.

போதுமான தயாரிப்புகள் இன்றி, பாடம் எடுக்க புத்தகங்கள் கூட இன்றி, இவ்வளவு அவசரமாக ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவருவது கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அறிவிப்பு புதுச்சேரி மண்ணின் தனித்துவமான பிரெஞ்சு கலாச்சார அடையாளத்தையும் அதன் நீண்டகால மொழி வரலாற்றையும் சிதைக்கும் வஞ்சகச் செயலாகும்.

புதுச்சேரி பூர்வகுடி மக்களின் உரிமையை இது நேரடியாகப் பறிக்கிறது. மேலும், பல ஆண்டுகளாக பிரெஞ்சு மொழி பயிற்றுவித்து வரும் ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தையும், அவர்களின் வேலை வாய்ப்பையும் இந்தத் தன்னிச்சையான முடிவு கேள்விக்குறியாக்கியுள்ளது.

மத்திய பாஜக அரசின் இந்த நடவடிக்கை நாட்டின் பன்முகத் தன்மைக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். அண்ணா வகுத்துத் தந்த இரு மொழிக் கொள்கையே (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாணவர்களின் எதிர்காலத்திற்கும் மாநில உரிமைகளுக்கும் உண்மையான பாதுகாப்பு என திமுக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மக்களின் விருப்பத்தைக் கேட்காமல் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தன்னிச்சையான முடிவை மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். புதுச்சேரி மாநில திமுக சார்பில் கல்வி துறையை கண்டித்து மிகப்பெரிய மொழி உரிமை போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

இரு மொழி கொள்கைக்கே ஆதரவு அதிமுக அன்பழகன் உறுதி: புதுச்சேரி அதிமுக மாநிலச் செயலர் அன்பழகன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "சிபிஎஸ்இ பாடத்தில் மூன்று மொழிகள் கொண்டு வருவதில் உள்ள அறிவிப்பால் மாணவர்களிடம் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதில் புதுச்சேரி அரசு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். புதுச்சேரியில் தமிழக கல்வி வாரியம் பின்பற்றப்படுகிறது. தனியாக கல்வி வாரியம் இல்லை.

தமிழகத்தில் அதிமுக ஆட்சியில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இரு மொழி கொள்கை மட்டுமே ஏற்று உறுதியாக இருந்தார். புதுச்சேரியில் அரசு பள்ளிகளில் சிபிஎஸ்இ பாடத்திட்டம் உள்ள பள்ளிகளில் மும்மொழி கொள்கை அமல்படுத்த வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி எழுகிறது.

புதுச்சேரியைப் பொருத்தவரை பல தனியார் கல்வி நிறுவனங்கள் அரசின் சட்டத் திட்டங்களுக்கு உட்படுவது இல்லை. மத்திய அரசு சொன்னவுடன் செய்ய வேண்டியதில்லை. மாணவர்கள் பாதிக்காத வகையில் மும்மொழி கொள்கையை விஷயத்தை அமல்படுத்த அரசு சீரான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். மும்மொழி கொள்கை அவசியமற்ற ஒன்று. இரு மொழி கொள்கைக்கு தான் அதிமுக ஆதரவு உண்டு," என்றார்.






பணி பாதுகாப்பு கேட்டுத் திரண்ட ஊழியர் படை

# சேலத்தில் நடந்த யூனியன் வங்கி ஊழியர்களின் எழுச்சி மாநாடு

சேலம் ஏப். 28-

"வேலை ஒன்றே... கூலி வேறா?" என்ற கேள்வியுடன், யூனியன் வங்கி தற்காலிக ஊழியர் சங்கத்தின் 2வது மாநில மாநாடு சேலம் அண்ணா பூங்கா எதிரே உள்ள சிவில் இன்ஜினியர் அசோசியேசன் கட்டிடத்தில் (ஏப்ரல் 26, ஞாயிறு) நடைபெற்றது.

அவைத் தலைவர் சங்கரேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த எழுச்சி மாநாட்டில், மாநிலத் தலைவர் சிதம்பரம் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். பல ஆண்டுகளாக உழைக்கும் தற்காலிக ஊழியர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும், அனைவருக்கும் சமமான ஊதியம் வழங்க வேண்டும் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்பும்போது தற்காலிக ஊழியர்களுக்குத்தான் முதல் முன்னுரிமை தரப்பட வேண்டும் என அதிரடித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.இந்த மாநாட்டை வெற்றிபெறச் செய்ய பொதுச்செயலாளர் நாகேந்திரன், துணை அவைத்தலைவர் ஸ்ரீதர், அமைப்புச் செயலாளர் வினோத் ராஜ்குமார், செயலாளர் கலைமாமணி ஆகியோர் முன்னின்று உழைத்தனர்.மேலும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சாம்சன், சந்திரகுமார், சரவணன், லாரன்ஸ், பார்த்தசாரதி, தமிழ்செல்வி, செல்லதுரை, அலெக்சாண்டர், சரவணகுமார், பரணிசந்திரன், ஜெகன், ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் தமிழகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த ஏராளமான தற்காலிக வங்கி ஊழியர்கள் தங்கள் உரிமைக் குரலைப் பதிவு செய்தனர்.

# சென்னையில் 4.71 லட்சம் பேர் வாக்களிக்கவில்லை




சென்னை, ஏப்.28-

சென்னை மாவட்டத்தில் 16 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. சமீபத்தில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் இத்தொகுதிகளில் 419 பேர் போட்டியிட்டனர். சுமார் 4,085 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன.மொத்தம் 28.93 லட்சம் பேர் வாக்களிக்க இருந்த நிலையில் மொத்தம் 24,22,097 (83.71 சதவீதம்) பேர் வாக்களித்தனர். கடந்த 2016 தேர்தலில் 60 சதவீதம், 2021 தேர்தலில் 59 சதவீதம் வாக்குகள் பதிவான நிலையில், இப்போது 83 சதவீதம் பதிவாகி சாதனை படைக்கப்பட்டுள்ளது.ஆண்களில் 84.05 சதவீதம் பேரும் (11.73 லட்சம்), பெண்களில் 83.40 சதவீதம் பேரும் (12.48 லட்சம்), மூன்றாம் பாலினத்தவரில் 58.53 சதவீதம் (508 பேர்) பேரும் வாக்களித்துள்ளனர். அதே நேரத்தில் 4.71 லட்சம் பேர் இந்த தேர்தலில் வாக்களிக்கவில்லை.திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கு வெளியூர் சென்றது, சென்னை திரும்ப போதிய போக்குவரத்து வசதி இல்லாதது, எஸ்ஐஆர் பணிகளுக்கு பிறகு, மாவட்டத்தை விட்டு நிரந்தரமாக இடம் பெயர்ந்தது, சமையல் காஸ், ஆட்டோ காஸ், சிஎன்ஜி தட்டுப்பாட்டால், வேலை இல்லாத நிலையில், சென்னையில் வாக்காளராக இருப்பவர்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டுச் சென்றது, உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டவர்கள், விபத்தால் நடக்க முடியாமல் போனவர்கள், மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள் போன்ற காரணங்களால் அவர்களால் வாக்களிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது.

# தமிழகத்தில் மே 4ல் பின்பற்றப்படும் வாக்கு எண்ணிக்கை நடைமுறை என்ன

சென்னை, ஏப்.28-

தபால் வாக்குகளே முதலில் எண்ணப்படும் என்பன உள்ளிட்ட வாக்கு எண்ணிக்கைக்கான வழிமுறைகளை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார். தமிழக சட்டப்பேரவைப் பொது தேர்தல் ஏப்ரல் 23 அன்று நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி மே 4 அன்று 62 வாக்கு எண்ணும் மையங்களில் நடைபெறவுள்ளது. இதனையடுத்து வாக்குகள் எண்ணும் வழிமுறைகளை தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார். அதன் விவரம்:வாக்குகள் எண்ணும் பணி சரியாக காலை 8:00 மணிக்குத் துவங்கும்.முதலில் காலை 8:00 மணிக்குத் தபால் வாக்குகள் எண்ணும் பணி துவங்கும்.30 நிமிடங்களுக்கு பிறகு, அதாவது காலை 8:30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (ணிகூஷிவி) பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணும் பணி துவங்கும்.மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகளை எண்ணும் சுற்றுகளில், கடைசி சுற்று வாக்குகள் எண்ணும் பணி, தபால் வாக்குகள் எண்ணும் பணி முடிக்கப்பட்டவுடன்தான் துவங்கப்படும்.ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திலும் ஒரு பகுதியில் தபால் வாக்குகளும், மற்றொரு பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (ணிகூஷிவி) பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் அதற்குரிய மேசைகளில் எண்ணப்படும். இரண்டுக்கும் தனித்தனியாக மேற்பார்வைக்காக உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அளவில் (ARO Level) அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

500 தபால் வாக்குகளுக்கு ஒரு மேசை என்ற விகிதத்தில் தபால் வாக்குகள் எண்ணப்படும்.

தபால் வாக்குகள்: தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த 3.60 லட்சம் அலுவலர்களில், வாக்காளர்களாக பதிவு செய்து, வாக்களிக்க விண்ணப்பித்த 2.88 லட்சம் அலுவலர்கள் (80%) தபால் வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.இத்துடன் தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்ட காவல் துறை சார்ந்த அலுவலர்களும், மற்ற தேர்தல் Zonal/Sector-™ பணிபுரிந்த அலுவலர்கள், தேர்தல் கண்காணிப்பு குழுக்களில் பணியாற்றிய அலுவலர்களும் சேர்த்து மொத்தம் 3.36 லட்சம் தேர்தல் அலுவலர்கள் தபால் வாக்குகளாகவும், 1.10 லட்சம் அலுவலர்கள் தேர்தல் பணி சான்றிதழ் (Election Duty Certificate) பெற்று நேரடியாக வாக்குச்சாவடியிலும், வாக்களித்துள்ளனர்.85+ மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அளித்த படிவம் 12D விண்ணப்பத்தின் பெயரில், மொத்தம் 1.73 லட்சம் வாக்காளர்கள் தபால் வாக்கு பெற்று வாக்களித்துள்ளனர்.

இதுவரை சேவை வாக்காளர்கள் (Service Voters) 18,000 நபர்கள் வாக்களித்துள்ளனர். இவர்களின் தபால் வாக்குகள் வாக்கு எண்ணிக்கை நாளான 04 052026 (திங்கட்கிழமை) அன்று காலை 8:00 வரை பெறப்படும். வாக்குச்சாவடியில் வாக்களித்த வாக்காளர்கள் மட்டுமின்றி, கூடுதலாக 6.37 லட்சம் வாக்காளர்களுக்கு வாக்களிக்க ஏதுவாக வசதிகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களிடம் வாக்குகள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆரூரா... தியாகேசா பக்தி கோஷம் முழங்க தஞ்சை பெரிய கோயில் சித்திரை தேரோட்டம் கோலாகலம்





தஞ்சாவூர், ஏப்.28-

தஞ்சாவூர் பெரிய கோயிலின் சித்திரை பெருவிழாவை முன்னிட்டு சித்திரைத் தேரோட்டம் இன்று காலை (ஏப்.27ம் தேதி) ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுக்க கோலாகலமாக நடைபெற்றது.தஞ்சாவூர் பெரிய கோயிலில் சித்திரைத் பெருவிழா ஏப்ரல் 13ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று காலை நடைபெற்றது. முன்னதாக தேருக்கு கடந்த ஏப்ரல் 15ம் தேதி பந்தல் கால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து, தேருக்கு வர்ணம் பூசி, அலங்கரிக்கும் பணி நடைபெற்றது. இதன் மூலம் 19 அடி உயரம் கொண்ட தேர், 50 அடி உயரத்தை எட்டியுள்ளது. சாதாரணமாக 40 டன் எடை கொண்ட தேர் அலங்காரத்துக்கு பிறகு 43 டன்னாக உயர்ந்துள்ளது.

தேரோட்டத்தை முன்னிட்டு இன்று அதிகாலை 5 மணிக்குள் ஸ்ரீ தியாகராஜர், ஸ்கந்தார் ஸ்ரீ கமலாம்பாள் புறப்பாடும், முத்துமணி அலங்கார சப்பரத்தில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் நடைபெற்றது. தேரில் ஸ்ரீ தியாகராஜர், கமலாம்பாள் எழுந்தருளினர்.பின்னர், காலை 6.20 மணிக்கு திருத்தேரை மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே, தருமபுர ஆதீன கட்டளை தம்பிரான் சுவாமிகள், ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் விமூர்த்தானந்தா சுவாமி, தஞ்சாவூர் மாவட்ட நீதிபதி வேல் முருகன் ஆகியோர் வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தனர்.இதையடுத்து ஆயிரக்கணக்கான பக்தர்களின் தியாகேசா, ஆரூரா என்ற பக்தி கோஷத்திற்கு மத்தியில் தேர் நிலையை விட்டு நகர்ந்து ஆடி அசைந்து வந்தது . தேரை பக்தர்கள் பாதுகாப்பாக வடம் பிடித்து செல்ல தேவையான ஏற்பாடுகளை காவல்துறை, தீணையப்புத் துறை, மாநகராட்சி நிர்வாகம், சுகாதாரத் துறை, இந்து சமய அறநிலையத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் இணைந்து செய்திருந்தனர்.மேலும் பக்தர்களின் பாதுகாப்பை கருதி வடக்கு வீதி சாலையில் இரு புறமும் கழிவுநீர் செல்லும் கால்வாய்கள் திறந்த நிலையில் உள்ள இடங்களில் இரும்புக் கம்புகளை கொண்டு தடுப்பு அரண்கள் அமைக்கும் பணி செய்யப்பட்டிருந்தன. தேரில் உள்ள சுவாமிக்கு தேங்காய், பழம் வழங்கி அர்ச்சனை செய்ய ஏதுவாக 14 இடங்களில் தேர் நின்று செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டது.பெரிய கோயில் சித்திரைத் தேரோட்டத்தை முன்னிட்டு இன்று தஞ்சாவூர் மாவட்டத்துக்கு கல்வி நிறுவனங்களுக்கும், அரசு அலுவலகங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. தேரோட்டத்தில் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.



# நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியீடு: நிர்வாகக் காரணங்களால் தாமதம்

சென்னை ,ஏப்.28-

நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட், நிர்வாகக் காரணங்களால் நேற்று வெளியாகவில்லை. மாணவர்கள் இன்று பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று என்டிஏ அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள், 'நீட்' தேர்வில் தகுதி பெறுபவர்களைக் கொண்டு நிரப்பப்படுகின்றன.

அதேபோல, ராணுவக் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கும் நீட் தேர்வு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் இத்தேர்வை நடத்தி வருகிறது.

அந்த வகையில், 2026 27ம் கல்வி ஆண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் மே 3ம் தேதி நடைபெற உள்ளது. தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருச்சி, மதுரை, கோவை என 30 நகரங்கள் உட்பட நாடு முழுவதும் 552 நகரங்களில் தேர்வு நடைபெறும்.

துபாய், அபுதாபி, தோகா, மஸ்கட், ரியாத், சிங்கப்பூர் என வெளிநாடுகளில் 14 இடங்களிலும் தேர்வு நடைபெறுகிறது. நீட் தேர்வுக்கு இதுவரை இல்லாத வகையில் 26 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் விண்ணப்பித்துள்ளனர்.

நீட் தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் https://neet.nta.nic.in என்ற இணையதளத்தில் ஏப்.26ம் தேதி (நேற்று) முதல் ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று என்டிஏ அறிவிருத்திருந்தது. ஆனால், அறிவித்தபடி நேற்று ஹால் டிக்கெட் வெளியாகவில்லை.

இதுதொடர்பாக என்டிஏ வெளியிட்ட அறிவிப்பில், 'நிர்வாகக் காரணங்களால் நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட் ஏப்.26ம் தேதி வெளியாகவில்லை. 27ம் தேதி (முதல் ஹால் டிக்கெட்டை இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ரயில்களில் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு பெட்டிகளில் பயணிக்க சலுகை

சென்னை, ஏப்.28-

ரயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பெட்டிகளில் பயணிக்க, இனி, யுடிஐடி என்னும் தேசிய தனித்துவமான அடையாள அட்டை பயன்படுத்தலாம் என, ரயில்வே வாரியம் அறிவித்துள்ளது.

இது குறித்து, ரயில்வே வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய ரயில்வே வாரியம் சார்பில் இயக்கப்படும், ஒவ்வொரு சாதாரண மற்றும் விரைவு ரயில்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு பெட்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பயணிக்க, ரயில்வே வாரியம் வழங்கும் கட்டண சலுகை, பாஸ் பெற்றவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

இதர மாற்றுத் திறனாளிகள், முன்பதிவில்லாத சாதாரண பெட்டிகளில் கட்டணம் செலுத்தி பயணித்து வந்தனர். இந்நிலையில், தேசிய மாற்றுத் திறனாளி நலத்துறை வாயிலாக, யுடிஐடி என்னும் தனித்துவமான அடையாள அட்டை பெற்ற அனைவரும், இப்பெட்டிகளில் பயணிக்கலாம்.

ரயில்வே வாரியத்தின் கட்டண சலுகை பாஸ் பெற்றவர்களும் இப்பெட்டிகளில் பயணிக்கலாம். அத்தகைய பாஸ் பெறாத மாற்றுத் திறனாளிகள், கட்டண டிக்கெட் பெற்று, தங்கள் யுடிஐடி அட்டையை காட்டி, இந்த சிறப்பு பெட்டிகளில் பயணிக்கலாம்.

அனுமதியின்றி இப்பெட்டியில் பயணிக்கும் இதர பயணிகள் மீது, ரயில்வே சட்டத்தின் கீழ், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் ஆட்டோ எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு: 3 மணி நேரம் காத்திருக்கும் ஓட்டுநர்கள்



சென்னை, ஏப்.28-

சென்னையில் ஆட்டோ எல்பிஜி எரிவாயு கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டுநர்கள் 3 மணி நேரம் வரை வரிசையில் காத்திருந்து, நிரப்பி செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றத்தால், காஸ் சிலிண்டர், ஆட்டோ எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை சமாளிக்க மாற்று வழிகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. இதற்கிடையில், வாகனங்ளுக்கான எல்பிஜி, சிஎன்ஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர்.சென்னை நகரில் பல்லாயிரக்கணக்கான ஆட்டோக்கள், கால் டாக்சிகள் எல்பிஜி மற்றும் சிஎன்ஜி எரிவாயுவை பயன்படுத்துகின்றன. தற்போது எல்பிஜி எரிவாயு தட்டுப்பாட்டால், பல்வேறு தனியார் ஆட்டோ எரிவாயு நிலையங்களில் மூடப்பட்டுள்ளன.சைதாப்பேட்டை, கிண்டி. சிஐடி நகர் உள்பட சில இடங்களில் திறக்கப்பட்டுள்ள எரிவாயு நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருந்து நிரப்பி செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக, சிஐடி நகரில் 2 கி.மீ. தூரத்துக்கு 3 மணி நேரமாக நீண்ட வரிசையில் காத்திருந்து, காஸை நிரப்பி செல்லும் பரிதாப நிலைக்கு ஆட்டோ ஓட்டுநர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.சென்னையில் ஆட்டோ, கார் ஆகியவற்றுக்கு நிரப்பப்படும் காஸ் நிரப்பும் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால், ஆட்டோ ஓட்டுநர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து, ஆட்டோ ஓட்டுநர்கள் கூறுகையில், "ஏற்கனவே ஆட்டோ எரிவாயு தட்டுப்பாட்டால், ஓட்டுநர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பெரும்பாலான நிலையங்களில் எல்பிஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டு, உடல்நலக் குறைவு ஏற்படுகிறது. இப்பிரச்சினைக்கு மத்திய அரசு தீர்வு காண வேண்டும்" என்றனர்.இது குறித்து, இந்திய எண்ணெய் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: இந்திய எண்ணெய் நிறுவனங்களில் போதுமான அளவு எரிவாயு கையிருப்பு உள்ளது. எண்ணெய் நிறுவனங்களின் கீழ் செயல்படும் எரிவாயு நிரப்பும் மையங்களுக்கும் போதுமான அளவு காஸ் வழங்கப்படுகிறது.

வாகன ஓட்டிகள் தங்களுக்குரிய வாகனங்களில் போதுமான அளவு காஸ் நிரப்பி கொள்ளலாம். ஆட்டோக்கள் நீண்ட வரிசையில் காத்துக்கிடப்பதற்கு காரணம் பல தனியார் காஸ் நிரப்பும் நிலையங்களில், எரிவாயு இல்லாமல் இருப்பதுதான்.அத்துடன், காஸ் தட்டுப்பாடு காரணமாக, ஒருசில காஸ் நிரப்பும் மையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இதனால், ஒட்டுமொத்தமாக அனைவரும் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் நடத்தும் மையங்களை தேடி ஒரே நேரத்தில் செல்வதால், நீண்ட வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# உண்மையில் தேர்தல் என்பது திருவிழாதான்: தப்பாட்டக் கலைஞர்கள் மகிழ்ச்சி



சென்னை, ஏப்.28-

இந்த தேர்தலில் நல்ல வருவாய் ஈட்டிய மகிழ்ச்சியில் உள்ள தப்பாட்டக் கலைஞர்கள் (தப்பு செட்டு), உண்மையில் தேர்தல் என்பது எங்களுக்கு பெரிய திருவிழாதான் என்றனர். சென்னையில் கோயில் திருவிழாக்கள், கட்சி விழாக்கள், இல்ல விழாக்கள், இறுதி ஊர்வலம் என எதுவாக இருந்தாலும் முதலில் வந்து நிற்பவர்கள் தப்பாட்டக் குழுவினர்தான்.இவர்கள் வந்த பிறகுதான் விழாவே களைகட்டுகிறது. நடந்து முடிந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது, சென்னையில் கட்சி வேட்பாளருக்கு முன்பாக இந்த தப்பாட்டக் குழுவினர்தான் சென்றனர்.அந்த ஓசையைக் கேட்டுத்தான், வேட்பாளர் வருகையை அறிந்து பொதுமக்களும் வீட்டைவிட்டு வெளியில் வந்தனர். தேர்தல் பிரச்சாரத்தின் முக்கிய அங்கமாகவே தப்பாட்டக் கலை மாறிவிட்டது. இந்த தேர்தலால் அவர்களுக்கு நல்ல வருவாயும் கிடைத்துள்ளது.இது தொடர்பாக, வேட்பாளர் ஒருவருக்கு பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்த கலைஞர்கள் சிலர் கூறியதாவது: வழக்கமாக மாதம் சுமார் 7 முதல் 10 நிகழ்ச்சிகளுக்கு அழைப்பார்கள். அதன் மூலம் ஒரு நபருக்கு, நிகழ்ச்சி ஒன்றுக்கு சுமார் ரூ.800 வருவாய் கிடைக்கும்.மாதத்துக்கு அதிகபட்சமாக ஒரு நபர் ரூ.10 ஆயிரம் சம்பாதிக்க முடியும். மற்ற நாட்களில் வீடுகளுக்கு பெயின்டிங் வேலை உள்ளிட்ட பல்வேறு வேலைகளுக்கு சென்றுவிடுவோம்.ஆனால், இப்போது தேர்தல் வந்ததால், கடந்த மார்ச் 15ம் தேதி முதலே நாங்கள் பிசியாகிவிட்டோம். தினமும் காலை, மாலை வேலை கிடைத்தது. ஏப்.21ம் தேதி வரைக்கும் தினமும் வேலை கிடைத்தது. இதற்கு முன்பு தமிழகத்தில் தேர்தல் அறிவித்த நாளிலிருந்து விரைவாக தேர்தல் நடத்தி முடிக்கப்படும். அதற்கடுத்த கட்டங்களில்தான் பிற மாநிலங்களில் நடக்கும்.ஆனால், இந்தத் தேர்தலில் தமிழகத்துக்கு தாமதமாக நடத்தப்பட்டதால், சுமார் 35 நாட்கள் தேர்தல் பரபரப்பும், பிரச்சாரங்களும் நீடித்தன.

அதனால் நல்ல வருவாயும் கிடைத்தது. இந்தத் தேர்தலில் ஒவ்வொருவரும் ரூ.45 ஆயிரம் வரை வருவாய் ஈட்டியிருக்கிறோம். உண்மையில் எங்களுக்கு தேர்தல் என்பது ஒரு திருவிழாதான். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ‘சென்னை ஒன்’ செயலி மூலம் வெளியூர் பஸ் டிக்கெட் பெறும் வசதி: போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தகவல்

சென்னை, ஏப்.28-

வெளியூர் பேருந்துகளுக்கான டிக்கெட்டுகளை ‘சென்னை ஒன்’ செயலியில் பெறும் வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். சென்னையில் போக்குவரத்து சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் (கும்டா) ஏற்படுத்தப்பட்டது. இந்த குழுமம் வாயிலாக ‘சென்னை ஒன்’ என்ற செயலி உருவாக்கப்பட்டு கடந்த செப்.22ம் தேதி முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.இந்த செயலி வாயிலாக மெட்ரோ ரயில், மின்சார ரயில், மாநகரப் பேருந்துகளில் பயணிப்பதற்கான டிக்கெட்டுகளை க்யூஆர் குறியீடு வழியாக பெறலாம். இந்த 3 சேவைகளுக்கும் சேர்த்து அல்லது தனித் தனியாகவும் மக்கள் இந்த செயலியில் டிக்கெட் பெற முடியும்.

இந்த செயலியை 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். இச்செயலி மூலம் மாநகரப் பேருந்துகளில் ரூ.1,000, ரூ.2,000க்கான மாதாந்திர பேருந்து பயண அட்டைகளை, ‘டிஜிட்டல்’ வடிவில் பெறும் வசதி உள்ள நிலையில், மெட்ரோரயில், மின்சார ரயில் ஆகியவற்றுக்கான மாதாந்திர பயணச் சீட்டுகளை, இந்த செயலியில் பெற வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில், அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்ட அரசு போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றின் பேருந்துகளில் பயணிக்க, சென்னை ஒன் செயலியில் டிக்கெட் எடுக்கும் வசதியை விரைவில் அறிமுகப்படுத்த போக்குவரத்துத் துறை திட்டமிட்டுள்ளது.இதுகுறித்து போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறியதாவது: மாநகரப் பேருந்துகளைப் போல, வெளியூர் செல்லும் பேருந்துகளுக்கும் டிக்கெட் எடுக்கும் வசதி ஏற்படுத்த திட்டமிடப்பட்டது.இதற்கான நடைமுறைகள் குறித்து, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம், அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் போக்குவரத்துக் கழகம் மற்றும் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மத்தியில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.இதற்கான புதிய மென்பொருள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளியூர் பேருந்துகளில் ஜிபிஎஸ் வசதியை ஏற்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் புதிய மென்பொருள் தயாரிக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

# திமுகவினர் மீது நடவடிக்கை எடுக்க வேல்முருகன் கோரிக்கை



சென்னை, ஏப்.28-

நெய்வேலி, குறிஞ்சிப்பாடி ஆகிய தொகுதிகளில் கட்சியினர், பொதுமக்கள் மீது வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் அவசர மாநில செயற்குழு கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. பின்னர், நிருபர்களிடம் கட்சியின் நிறுவனத் தலைவர் தி.வேல்முருகன் கூறியதாவது: நடந்து முடிந்த தேர்தலில், தவாக சார்பில் நெய்வேலி தொகுதியில் திருமால்வளவன், குறிஞ்சிப்பாடி தொகுதியில் கண்ணன் ஆகியோரை வேட்பாளர்களாக நிறுத்தியிருந்தேன்.2 தொகுதிகளிலும் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ள சூழ்நிலையில், திமுக தனது உளவுத்துறை மூலமாக தெரிந்துகொண்டு, இத்தொகுதிகளில் பல இடங்களில் வன்முறை வெறியாட்டங்களை நடத்தியுள்ளது. இதனால் வேட்பாளர்களும், தொண்டர்களும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு 8 மணிக்கு மேல் பூத்களை கைப்பற்றி, வாக்களித்துள்ளனர். ஆனால், இதுவரை ஓர் இடத்தில் கூட குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. அதற்கு நேர்மாறாக, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீது வழக்குப் பதிந்துள்ளனர்.எனவே, நீதி கிடைக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும், அப்பாவிகள் மீது போடப்பட்ட வழக்குகளை ரத்து செய்யவும் வேண்டும்.இந்திய தேர்தல் ஆணையம், தமிழக தேர்தல் ஆணையம், தமிழக காவல் துறை டிஜிபி, உள்துறை செயலர், உளவுத் துறை டிஜிபி ஆகியோர் எனக்கு நீதி வழங்க வேண்டும். எங்கள் கட்சி தொண்டர்கள், ஆதரவளித்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு எதிராக நீதி கேட்கும் நடவடிக்கையில் விரைவில் ஈடுபடுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

# மெரினாவில் கார் தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு

சென்னை, ஏப்.28-

மெரினா கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த கார் தீப்பற்றி எரிந்த சம்பவம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சென்னையில் மென்பொறியாளராகப் பணிபுரிந்து வரும் ஸ்ரீநாத் என்பவர், நேற்று அதிகாலை சூரிய உதயத்தைக் காண்பதற்காகத் தனது காரில் மெரினா கடற்கரைக்கு வந்தார்.




மெரினா சர்வீஸ் சாலையில் காரை நிறுத்திவிட்டு கடற்கரைக்குச் சென்றார். சிறிது நேரம் கழித்து அவர் மீண்டும் காரை நோக்கி வந்தபோது, எதிர்பாராத விதமாக கார் திடீரெனத் தீப்பற்றி எரியத் தொடங்கியது.கண்ணிமைக்கும் நேரத்தில் தீ காரின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியதால், அந்த இடமே கரும்புகை மண்டலமாகக் காட்சியளித்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அங்கிருந்த பொதுமக்களும், நடைப்பயிற்சி மேற்கொண்டவர்களும் உடனடியாக காவல் துறையினருக்கும், தீயணைப்புத் துறைக்கும் தகவல் அளித்தனர்.தகவலின் பேரில், திருவல்லிக்கேணி தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, தீயை அணைத்தனர். எனினும், இந்த விபத்தில் கார் முற்றிலும் எரிந்து எலும்புக்கூடாக மாறியது.

அதிர்ஷ்டவசமாக கார் நிறுத்தப்பட்டிருந்த போது தீ விபத்து ஏற்பட்டதால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது. காரில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது குறித்துக் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கோடை வெப்பம் அதிகரிப்பதால் தமிழகத்தில் மின் பற்றாக்குறை ஏற்படும்

## மத்திய மின்துறை தகவல்



சென்னை, ஏப்.28-

மே மாதம் முதல் தமிழகத்தின் மின் தேவை அதிகரித்து பற்றாக்குறை ஏற்படும் என மத்திய மின் துறை தெரிவித்துள்ளது. இதை சமாளிக்க, கூடுதல் மின்சாரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஏற்கெனவே பல மாவட்டங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கு மேல் வெப்பம் பதிவாகி வருகிறது. இதனால், வீடுகள், அலுவலகங்களில் பெரும்பாலான நேரம் ஏசி இயக்கப்பட்டு வருகிறது.

இந்த கோடை காலத்தில் தேவை அதிகரித்து தென் மாநிலங்களில் மின் பற்றாக்குறை அதிகரிக்கும் என மத்திய மின் துறை தெரிவித்துள்ளது. தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா, தெலங்கானா, கேரளா, கர்நாடகா ஆகிய தென் மாநிலங்களின் மின் தேவை குறித்த தகவல்களை மத்திய மின்துறை வெளியிட்டுள்ளது.கடந்த 2025 மற்றும் 2026 மார்ச் மாதங்களை ஒப்பிட்டு இந்த மின் தேவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தென் மாநிலங்களின் தினசரி மின் தேவை 69,934 மெகா வாட்டில் இருந்து 73,805 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.குறிப்பாக, தமிழகத்தின் மின் தேவை 19,679 மெகாவாட்டில் இருந்து 19,822 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. தென் மாநிலங்களிலேயே மின் தேவையில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது.

தமிழகத்தில் சராசரியாக தினசரி மின் தேவை 16,000 மெகாவாட்டாக இருக்கும். இது வெயில் காலத்தில் குறிப்பாக அக்னி நட்சத்திரம் தொடங்கும்போது இன்னும் அதிகரிக்கும். கடந்த 21ம் தேதி தமிழகத்தின் மின் தேவை புதிய உச்சம் தொட்டு 21,060 மெகாவாட்டாக இருந்தது.இந்த சூழலில், மே மாதம் முதல் தமிழகத்தின் மின் தேவை அதிகரித்து பற்றாக்குறை ஏற்படும் என மத்திய மின் துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கோடையில் மின் தேவை எவ்வளவு இருக்கும், எவ்வளவு மின்சாரம் கிடைக்கும், பற்றாக்குறை எவ்வளவு ஏற்படும் என்பதை முன்கூட்டியே மதிப்பீடு செய்து, பற்றாக்குறையை சமாளிக்க, கூடுதல் மின்சாரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கலப்படங்களை தடுக்கும் வகையில் ஐஸ்கிரீம் தயாரிப்பை கண்காணிக்க உணவு பாதுகாப்புத் துறை உத்தரவு



சென்னை, ஏப்.28-

ஐஸ்கிரீமில் சுவையூட்டிகள் போன்ற கலப்படங்களைத் தடுக்கும் வகையில், ஐஸ்கிரீம் தயாரிப்பை கண்காணிக்க அதிகாரிகளுக்கு உணவு பாதுகாப்புத் துறை உத்தரவிட்டுள்ளது.தமிழகத்தில் கோடை வெயில் சுட்டெரிக்கத் தொடங்கியுள்ள நிலையில், குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம்களின் விற்பனை அதிகரித்துள்ளது. இந்நிலையில் உரிய உரிமம் இன்றி ஐஸ்கிரீம் தயாரிப்பது, லாப நோக்கில் கலப்படங்களைச் செய்வது போன்ற முறைகேடுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதனால் குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவரது உடல்நலமும் பாதிக்கும் அபாயம் இருக்கிறது. இதை கருத்தில்கொண்டு, மாநிலம் முழுவதும் உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது.அதன்படி இயற்கை சர்க்கரைக்கு மாறாக தரம் குறைந்த சுவையூட்டிகள், செயற்கை நிறமிகள் மற்றும் ஆபத்தான வேதிப் பொருட்களை கலப்பது, குளிர்பானங்களில் பாஸ்போரிக் அமிலம் மற்றும் சலவைத்தூள் கூட்டுப் பொருட்களைச் சேர்ப்பது, தயாரிப்புக்கு சுகாதாரமற்ற நீரைப் பயன்படுத்துவது போன்றவற்றைத் தடுக்கும் பொருட்டு, மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு ஐஸ்கிரீம், குளிர்பான உற்பத்தி நிறுவனங்களில் தொடர் சோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, தயாரிப்பு நிறுவனங்கள் முறையாக உரிமம் பெற்றுள்ளனவா, தயாரிப்பு மற்றும் காலாவதி தேதி உறைகளில் அச்சிடப்பட்டுள்ளதா, மூலப்பொருட்களின் தரம் ஆகியவற்றை அதிகாரிகள் ஆய்வு செய்யுமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் தரப்பிலிருந்து வரும் புகார்களின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும், உணவுப் பாதுகாப்புத் துறையின் வழிகாட்டுதல்களை மீறி செயல்படும் நிறுவனங்களின் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்குத் துறை ரீதியான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. கோடைக் காலம் முழுவதும் இந்த கண்காணிப்புப் பணி தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருவள்ளூர் அருகே தெரு நாய்கள் கடித்து பெண்கள், சிறுவர்கள் உட்பட 9 பேர் காயம்

திருவள்ளூர், ஏப்.28-

திருவள்ளூர் அருகே கல்லம்பேடு, பூவனூர் கிராமங்களில் தெரு நாய்கள் கடித்து பெண்கள், சிறுவர்கள் உட்பட 9 பேர் காயமடைந்த சம்பவம், பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் அருகே பேரம்பாக்கம் அடுத்துள்ள கல்லம்பேடு, பூவனூர் கிராமங்களில் அதிகளவில் தெரு நாய்கள் சுற்றித் திரிகின்றன. இதுகுறித்து, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் பல முறை புகார் தெரிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என, பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது. இந்நிலையில், கல்லம்பேடு, பூவனூர் கிராமங்களில் நேற்று காலை சாலையில் நடந்து சென்ற பெண்கள் உள்ளிட்டவர்கள், வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் என, 9 பேரை தெரு நாய்கள் கடித்து காயப்படுத்தியுள்ளன. இதில், காயமடைந்த 9 பேரும் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். இச்சம்பவம், திருவள்ளூர் மாவட்ட பகுதிகளில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், கல்லம்பேடு, பூவனூர் கிராமங்களில் தெரு நாய்களை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என,பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# கஞ்சா பங்கிடுவதில் வாக்குவாதம்: புழல் சிறையில் கைதிகளுக்கு இடையே மோதல்




செங்குன்றம், ஏப்.28-

சென்னை, புழல் மத்திய சிறையில் கஞ்சா பங்கிடுவது தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி, கைதிகளுக்கு இடையே மோதலாக வெடித்தது. இதுதொடர்பாக கைதிகள் 12 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.சென்னை, புழல் மத்திய சிறையில் தண்டனை, விசாரணை, மகளிர் என, 3 பிரிவுகளில் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். சிறையினுள், தடையை மீறி கஞ்சா, மொபைல் போன் உள்ளிட்டவை பயன்படுத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், புழல் மத்திய சிறையின் விசாரணை பிரிவில் நேற்று முன் தினம், கைதிகளில் ஒரு தரப்பினர் கஞ்சா வைத்திருந்துள்ளனர். இதையறிந்த மற்றொரு தரப்பினர் அவர்களிடம் கஞ்சா கேட்டதாக கூறப்படுகிறது.அப்போது, கஞ்சாவை கொடுக்க மறுத்ததால், அவர்களுடன் எதிர்தரப்பினர் வாக்குவாதம் செய்தனர். அந்த வாக்குவாதம் முற்றி, இருதரப்பு கைதிகளுக்கிடையே மோதலாக வெடித்தது. இதனையறிந்த சிறை காவலர்கள் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தி, அவரவர் அறைகளுக்கு கொண்டு சென்று அடைத்தனர்.இச்சம்பவம் தொடர்பாக சிறை அதிகாரிகள், புழல் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் நடத்திய முதல் கட்ட விசாரணையின் அடிப்படையில், இருதரப்பு விசாரணை கைதிகளான ஆனந்த், சின்னத்தம்பி, ராஜேஷ், நரசிம்மன், சக்திவேல், விஜய், கணேஷ்குமார், சூர்யா, நித்தியவேல், விக்னேஷ், கேசவன், விக்னேஷ் ஆகிய 12 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்து, தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.மேலும், போலீஸார் தடை செய்யப்பட்ட கஞ்சா சிறைக்குள் வந்தது எப்படி? என பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 128வது மலர்க் கண்காட்சிக்கு தயாராகும் ஊட்டி தாவரவியல் பூங்கா



ஊட்டி, ஏப்.28-

ஊட்டியில் மே மாதம் நடைபெறவிருக்கும் 128வது மலர்க் கண்காட்சிக்காக அரசு தாவரவியல் பூங்கா முழு வீச்சில் தயாராகி வருகிறது. சர்வதேச சுற்றுலாத் தலமான நீலகிரி மாவட்டத்துக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.கடந்த ஆண்டு சுமார் 25 லட்சம் பேர் வந்த நிலையில், இந்த எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், கோடைகாலத்தில் மாவட்ட நிர்வாகம், சுற்றுலா மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் கோடை விழா நடத்தப்படும்.இதில் முக்கியமாக ரோஜா காட்சி, மலர்க்கண்காட்சி மற்றும் பழக்கண்காட்சி ஆகியவை அடங்கும். உலக பிரசித்தி பெற்ற இந்த கண்காட்சியை காண உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருவார்கள்.கண்காட்சி தொடங்கும் முதல் இரு நாட்களில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் மலர்க்காட்சியை கண்டு ரசித்து செல்வார்கள். கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் நீலகிரி மாவட்டத்தில் உறைபனியின் தாக்கம் அதிகமாக இருந்ததால், வனங்கள் மற்றும் புல்வெளிகள் காய்ந்து போயுள்ளன.ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா புல்மைதானமும் காய்ந்து போய் உள்ளது. இதனால், பராமரிப்புப் பணிக்காக புல்தரை மூடப்பட்டுள்ளது. புல்தரையில் உள்ள பள்ளங்களை சீரமைக்கஉரம் கலந்த மண்கொட்டப்பட்டு, தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது.மலர்க் காட்சி மாடம், கண்ணாடி மாளிகையில் 50 ஆயிரம் வண்ண மலர்த் தொட்டிச் செடிகள் அடுக்கி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தோட்டக் கலைத் துறை அதிகாரிகள் கூறும்போது, “இந்த ஆண்டு கோடை மழை சரிவர பெய்யாததால், பூங்காவில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது.

கடும் வெயிலால் செடிகள்வாடி வருகின்றன. இதனால், வெளியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து செடிகளுக்கு பாய்ச்சி வருகிறோம். கடந்த சில நாட்களாக மழைக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மழை பெய்தால் பூங்கா பொலிவு பெறும். மழை பெய்யாவிட்டால் சிக்கல் ஏற்படும். மலர்க் கண் காட்சிக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன’’ என்றனர்.

## 10 லட்சம் மலர் நாற்றுகள்

பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் ஜெரேனியம், சைக்லமன், பால்சம் மற்றும் பல புதிய ரக ஆர்னமெண்டல் கேல், ஓரியண்டல் லில்லி, ஆசியாடிக் லில்லி, டேலியா, பிகோனியா, கேன்டீடப்ட், பேன்சி, பெட்டுனியா, பிளாக்ஸ் உள்ளிட்ட 275 வகையான விதைகள், செடிகள் ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி, நெதர்லாந்து மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து பெறப்பட்டு மலர்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பூங்காவின் பல்வேறு பகுதிகளில் 10 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

# வண்டியின் டயர் தேய்ந்தால் 'டயர் லோன்', டீசல் போட டீசல் லோன்' உண்டு சலுகைகளை அள்ளித் தெளித்த ஸ்ரீராம் நிதி நிறுவனம்

ஒட்டன்சத்திரம் ஏப். 28- "டயரும் தேயக்கூடாது... டிரைவர் மனசும் நோகக்கூடாது!" இதுதான் ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட்டில் எதிரொலித்த முழக்கம். ஸ்ரீராம் நிதி நிறுவனம் சார்பில் நடைபெற்ற பிரம்மாண்ட வாடிக்கையாளர் மற்றும் ஓட்டுநர்கள் சந்திப்பு விழா, மாவட்ட மேலாளர் முருகானந்த பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.*அள்ளித் தெளித்த சலுகைகள்:*

திருச்சி மண்டல மேலாளர் சரவணகுமார் அனைவரையும் உற்சாகமாக வரவேற்று பேசுகையில், "எங்களுக்கு 3000 கிளைகள் இருக்கலாம், ஆனால் எங்க ஹீரோக்கள் நீங்கதான்!" என ஓட்டுநர்களைக் கொண்டாடினார். வண்டிக்கு டயர் வாங்க, டீசல் போட, சர்வீஸ் செய்ய என எல்லாவற்றிற்கும் கடன் உண்டு. என அறிவித்தோடு நில்லாமல், "நீங்க வண்டி ஓட்டுங்க.. உங்க பிள்ளைகளை நாங்க படிக்க வைக்கிறோம்" என 8 முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் பிள்ளைகளுக்குக் கல்வி ஊக்கத்தொகையும், பட்டதாரி இளைஞர்களுக்கு






வேலைவாய்ப்பும் என அதிரடியாக அறிவித்து அரங்கத்தை அதிர வைத்தார்.இந்த விழாவில் பழனி வட்டார போக்குவரத்து அலுவலர் (RTO) ஸ்ரீதரன், ஒட்டன்சத்திரம் வட்டார போக்குவரத்து அலுவலர் செல்வராஜ் ஆகியோர் கலந்துகொண்டு ஓட்டுநர்களுக்குப் பாதுகாப்பு டிப்ஸ்களை வழங்கினர். காந்தி மார்க்கெட் நிர்வாகிகள் தங்கவேல், வஞ்சியப்பன், ராசியப்பன், ஆதித்யா ப்ளூ மெட்டல்ஸ் கண்ணன், உதயம் ராமசாமி, முன்னாள் அதிமுக ஒன்றிய செயலாளர் பி. பாலசுப்ரமணியம் உள்ளிட்ட முக்கியப் புள்ளிகள் முன்னிலையில் விழா களைகட்டியது.*ஸ்பெஷல் ட்ரீட்:*வெறும் பேச்சோடு நில்லாமல், ஒரு பக்கம் புதுப்புது டயர்கள் மற்றும் ஸ்பேர் பார்ட்ஸ் கண்காட்சி, இன்னொரு பக்கம் ஓட்டுநர்களுக்கான இலவச கண் மற்றும் பொதுநலப் பரிசோதனை என அசத்தலாக நடந்து முடிந்தது இந்த மெகா சங்கமம். இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் டிரைவர்கள் கலந்துகொண்டு "ஸ்ரீராம் நிதி நிறுவனத்தின்" சேவைகளை வாழ்த்திச் சென்றனர்.




## சேலத்திற்குப் புதிய மகுடம்: ரூ.59 கோடியில் 'குளு குளு' ஏசி நீதிமன்றங்கள் திறப்பு

சேலம் ஏப். 28- சேலம் அஸ்தம்பட்டி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில், ரூ.59.43 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 16 புதிய நவீன நீதிமன்றக் கட்டிடங்களின் திறப்பு விழா நடைபெற்றது.5 மாடிகளுடன், முன்புறம் 8 மற்றும் பின்புறம் 8 என மொத்தம் 16 நீதிமன்றங்கள். முழுமையான ஏசி மற்றும் லிப்ட் வசதிகள் கொண்டது.உச்ச நீதிமன்ற நீதிபதி சுந்தரேஷ் தலைமை தாங்கி கட்டிடத்தைத் திறந்து வைத்தார். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதி காரி சிறப்புரையாற்றினார்.இந்த விழாவில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுரேஷ்குமார், ஜெயசந்திரன் (சேலம் மாவட்ட பொறுப்பு நீதிபதி), இளந்திரையன், குமரப்பன் (சேலம் பொறுப்பு நீதிபதி) ஆகியோர் சிறப்புரையாற்றினர். மேலும், சேலம் மாவட்ட ஆட்சியர் அருண் தம்பு ராஜ், மாநகர போலீஸ் கமிஷனர் அனில்குமார் கிரி, எஸ்பி கௌதம் கோயல், சேலம் வழக்கறிஞர் சங்கத் தலைவர் விவேகானந்தன், செயலாளர் நரேஷ்பாபு, குற்றவியல் வழக்கறிஞர் சங்கத் தலைவர் முருகன் உள்ளிட்ட ஏராளமான வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.முன்னதாக, மாவட்ட முதன்மை நீதிபதி சுமதி வரவேற்புரை ஆற்றினார். பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் ரங்கநாதன் திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்தார். விழாவின் நிறைவாக, தலைமை நீதித்துறை நடுவர் கமலக்கண்ணன் நன்றியுரை ஆற்றினார்.



■ கருவம்பாளையம் அறிவு திருக் கோயிலில் இலவச ஓவிய பயிற்சி திருப்பூர் கருவம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள வேதாத்திரி மகரிஷி அவர்களின் அறிவு திருக்கோவிலில், பள்ளி மாணவ மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்று வருகிறது. இதில் ஓவிய பயிற்சி திருப்பூர் மாவட்ட சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை சார்பாக, நிறுவனர் டாக்டர் தர்மராஜ் இலவசமாக ஓவிய பயிற்சி நடத்துகிறார். 10 நாட்கள் இலவச பயிற்சி முடிந்ததும், அனைவருக்கும் ஓவிய போட்டி வைக்கப்பட்டு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.

## தனது பிறந்தநாளிலே பணி ஓய்வு பெற்ற ஆசிரியை

"ஆசிரியப் பணி என்பது வெறும் வேலை அல்ல, அது ஒரு வரம்!" இதை மெய்ப்பிக்கும் வகையில் மொடக்குறிச்சி பாண்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஒரு உணர்ச்சிகரமான நிகழ்வு அரங்கேறியது. இந்தப் பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வரும் விஜயலட்சுமி (ஏப். 27) தனது பணி நிறைவு பெறுகிறார். தற்செயலாக அவருக்குப் பிறந்தநாளும் கூட! தனது பணிக்காலத்தின் கடைசி நாளில் பிறந்தநாளையும் கொண்டாடும் அந்த ஆசிரியையைக் கௌரவிக்க ஒட்டுமொத்த பள்ளிக் கல்வித்துறை உயர் அதிகாரிகள் நேரில் வந்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர். தங்களை ஆளாக்கிய ஆசிரியையைப் பார்க்கப் பழைய கால மாணவர்கள் பலரும் திரண்டு வந்து காலில் விழுந்து ஆசி பெற்றனர்.





## 2 லட்சம் கோடி வர்த்தகம் செய்யும் KVB வங்கியின் புதிய 'பவர் சென்டர்' திருப்பூரில் திறப்பு

திருப்பூர் ஏப். 28- "டைம் இஸ் மணி!" தொழில்துறையின் இந்த தாரக மந்திரத்தை உணர்ந்து, திருப்பூரின் பிசினஸ் வேகத்திற்கு ஈடுகொடுக்க கரூர் வைஸ்யா வங்கி (KVB) ஒரு மாஸான முடிவை எடுத்துள்ளது. திருப்பூரில் வங்கியின் புதிய கோட்ட அலுவலகத்தை (Division-al Office) கோலாகலமாகத் திறந்து வைத்துள்ளது.*இனி எல்லாமே 'லோக்கல்'தான்:*திருப்பூர் மண்டலத்தில் ஏற்கனவே 37 கிளைகளுடன் கலக்கி வரும் ரிகூஷிஙி, இப்போது இந்தத் தனி கோட்ட அலுவலகத்தைத் திறந்திருப்பதன் மூலம் ஒரு மிகப்பெரிய மாற்றத்தைச் செய்துள்ளது. இனி பிசினஸ் லோன் அப்ரூவல் வாங்கச் சென்னைக்கோ அல்லது கரூருக்கோ அலைய வேண்டியதில்லை. லோக்கல் அதிகாரிகளே இங்கேயே முடிவெடுப்பார்கள் என்பதால், விஷிவிணி நிறுவனங்களுக்கு லோன் அப்ரூவல் இனி 'ராக்கெட்' வேகத்தில் கிடைக்கும்!

திறப்பு விழாவில் பேசிய வங்கியின் நிர்வாக இயக்குநர் ரமேஷ் பாபு, "இந்தியாவின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் இன்ஜின் திருப்பூர் தான். அந்த இன்ஜினை இன்னும் வேகமாக்க, லோன் அப்ருவல் அதிகாரத்தைச் சாமான்ய தொழில் முனைவோரின் கைகெட்டும் தூரத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்" என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

## மிஸ் திருநங்கை 2026 போட்டி சென்னைக்கு முதல் மூன்று இடங்கள்

### திருநங்கை நாயக்குகள் கூட்டமைப்பு சார்பில் கூவாகம் திருவிழா

விழுப்புரம், ஏப்.28- விழுப்புரத்தில் நடந்த மிஸ் திருநங்கை 2026 போட்டியில் சென்னையை சேர்ந்த் ஓமனா முதலிடமும், சாய் 2ம் இடமும், ஸ்விகி 3ம் இடமும் பெற்றனர். விழுப்புரத்தில் கூவாகம் கூத்தாண்டவர் கோயில் திருவிழாவையொட்டி சென்னை திருநங்கை நாயக்குகள் கூட்டமைப்பு சார்பில் கூவாகம் திருவிழா 2026 கலைநிகழ்ச்சி நேற்று இரவு நடந்தது. இதனையடுத்து மிஸ் திருநங்கை 2026 போட்டி நடந்தது. இதில் 100 திருநங்கைகள் கலந்து கொண்டனர். நடை, உடை, நடனம், பொதுஅறிவு உள்ளிட்ட திறமைகள் அடிப்படையில் முதல் சுற்றில் 12 திருநங்கைகளும், அடுத்தடுத்த சுற்றுகள் என 5 திருநங்கைகள் தேர்வு செய்யப்பட்டனர்.

நிறைவாக 3 திருநங்கைகள் தேர்வு செய்யப்பட்டு, மிஸ் திருநங்கை 2026 கிரீடம் சூட்டி பாராட்டினர். இதில் சென்னை ஓமனா முதலிடம் பெற்றார். சென்னை சாய் 2ம் இடமும், சென்னை ஸ்விகி 3ம் இடமும் பெற்றனர்.



## இராயகிரியில் 'உதவும் கரங்கள்' அறக்கட்டளையின் அன்பான நலத்திட்ட உதவி

தென்காசி ஏப். 28- "கொடுப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சி வேறு எதிலும் இல்லை!" இதனை மெய்ப்பிக்கும் வகையில் தென்காசி மாவட்டம் இராயகிரி உறவுகள் உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பில், நலிந்த உறவுகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மிகவும் உணர்வுப்பூர்வமாக நடைபெற்றது. சிந்தாமணி தெலுங்கு யாதவ சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு அறக்கட்டளைத் தலைவர் பெத்துராஜ் குட்டியான் தலைமை வகித்தார். அறப்பணிச் செம்மல் ஆ. தட்சிணாமூர்த்தி அவர்களின் பெரும் ஆதரவுடன், ஏழை எளிய பெண்களுக்குச் சேலைகள், பெட்ஷீட்கள் மற்றும் வாழ்வாதாரத்திற்குத் தேவையான அரிசி, மளிகை உள்ளிட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. மங்கையரின் முகம் மலர நடந்த இந்த உதவி, அந்தப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

இந்த விழாவில் சிந்தாமணி தெலுங்கு யாதவர் சமுதாய நாட்டாமை கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். அறக்கட்டளையின் அர்ப்பணிப்பு மிக்க தன்னார்வலர்களான ராஜகோபால், தங்க மாரியப்பன், சங்கர கோமதி, உஷா, முள்ளிக்குளம் உமா மகேஸ்வரி, வெள்ளத்துரை, கணேசன் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டு, தங்கள் கைகளால் உதவிகளை வழங்கி நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.




## வளைகுடாவில் அமைதி நிலவட்டும்: அமீரக ஆட்சியாளர்களின் நல்லெண்ணத்தைப் பறைசாற்றும் எளிய தொழிலாளியின் குரல்

புளியங்குடி ஏப். 28- உலக அமைதி வேண்டியும், போரில்லாப் பேரமைதி நிலைத்திருக்கவும் வலியுறுத்தி, தென்காசி மாவட்டம் புளியங்குடி சிந்தாமணியில் கவன ஈர்ப்பு அமைதிப் பேரணி நடைபெற்றது.1993 முதல் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஐக்கிய அரபு அமீரகத்தில் (ஹிகிணி) பணியாற்றி வரும் உதவும் உறவுகள் கரங்கள் அறக்கட்டளை சார்பில், அதன் நிறுவனத் தலைவர், தொழிலாளி பெத்துராஜ் வெங்கடாசலபதி, தான் உழைத்த மண்ணின் மீதான பற்று மற்றும் அந்த நாட்டின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இந்தப் பேரணியை முன்னெடுத்தார். அமீரக ஆட்சியாளர்களின் அமைதிப் பார்வையையும், போரில்லா உலகத்தின் அவசியத்தையும் அவர் இதன் மூலம் உலகிற்குப் பறைசாற்றினார். பேரணியில் அறக்கட்டளையின் தன்னார்வலர்கள் ராஜகோபால், தங்க மாரியப்பன், சங்கர கோமதி, உஷா, முள்ளிக்குளம் உமா மகேஸ்வரி, கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், சிந்தாமணி தெலுங்கு யாதவர் சமுதாயத்தின் நாட்டாமை கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உலக அமைதிக்காக இந்தப் பேரணியில் உணர்வுப்பூர்வமாகத் திரண்டு கலந்து கொண்டனர்.



■ திருச்சி மாவட்டம் திருவானைக்காவல் அருள்மிகு ஜம்பு கண்டீஸ்வரர் திருக்கோயிலில், தேசிய இந்து திருக்கோயில் பவுண்டேஷன் மூலம் கோசாலையில் உழவாரப்பணி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஈரோடு மாவட்டம் மற்றும் மண்டலத்தை சேர்ந்தவர்கள் பங்கு பெற்றனர்.

மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை
MAKKAL PODHU MANITHA SAMUGA SEVAI ARAKKATTALAI
( ISO.RTI.HR.TM.10A. )
திருப்பூர் மாவட்டம்
HUMAN RIGHTS
PUBLIC SOCIAL SERVICE TAMIL NADU - INDIA
உறுப்பினர் மற்றும் நிர்வாகிகள் சேர்க்கை...
REG:NO. 4/11-2026
98405 74726 - 97865 01230

S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
GOLD 916 | SIVER 92.5
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்.
7540002331 / 9865147105

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000